**O.S. 60/2017, 15.03.2021, 02.30 pm - 02.50 pm**

**வா.சா.1, ஜெயபால், த/பெ.பெருமாள்**

சாட்சி குறுக்கு விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

நான் எந்த சொத்தில் ஆக்கிரமிப்பாளராக உள்ளேன் என்றால் சர்வே எண்.81/6 ஆகும். சர்வே எண்.76/1, 76/3-ல் உள்ள சொத்துக்களை பற்றி தெரியுமா என்றால் அந்த சொத்துக்களை பற்றி தெரியாது. அசல் வழக்கு எண்.311/1995 திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் என் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பற்றி தெரியுமா என்றால் தெரியும். எத்தனை நபர் மீது அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கில் நான் எத்தனையாவது பிரதிவாதி என்றால் 25 நபர்களில் நானும் ஒருவர். அந்த வழக்கில் வழக்கறிஞரை வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். அதன் பிறகு பேபி அம்மாள் என் பெயரில் தனியாக வழக்கு தொடுத்தாரா என்றால் தொடுத்திருந்தார். 10.01.1983ல் தானசெட்டில்மெண்ட் பத்திரம் பேபி அம்மாள் பெயரில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும் கருப்பு மந்திரி என்பவர் எழுதி வைத்தார். மேற்படி விவரம் எனக்கு எவ்வளவு வருடத்திற்கு முன்பு எனக்கு தெரியும் என்றால் தோராயமாக 1987 அல்லது 1988 வருடத்தில் தெரியும். 19.03.1952 தேதிய கருப்பு மந்திரி பெயரில் கிரையப்பத்திரம் ஒன்று உள்ளது. அதை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். அந்த சொத்தை யாரிடமிருந்து அவர் கிரையம் பெற்றேன் என்றால் தளவெட்டி பெரியண்ணன் என்பவர் எழுதி கொடுத்தார். ஆனால் அந்த சொத்திற்கும், இந்த புறம்போக்கு நிலத்திற்கும் சம்மந்தமில்லை. அந்த பத்திரத்தில் என்னென்ன சர்வே எண், எவ்வளவு அளவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்கள் தெரியாது, ஆனால் ஏக்கரா 2.17 செண்ட்டும், ஏக்கரா 2.64 செண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. வட்டாட்சியர் அலுவலகத்தில் பைமாஸ் எண் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன், அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பைமாஸ் எண்.48-ற்கும், 53-ற்கும் தற்பொழுது சர்வே எண்.81/6 ஆகும். பைமாஸ் 52-ற்கு தற்பொழுது சர்வே எண் தெரியுமா என்றால் 81/7 ஆகும். தானசெட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என அறிவிக்க கோரி தனியாக பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் கோரவில்லை. அசல் வழக்கு எண்.609/1972 என்ற வழக்கு யார் யார் மீது போடப்பட்டது என்றால் பேபி அம்மாள் எங்கள் மீது போட்டார்கள். அந்த வழக்கு எந்த எண் கொண்ட சொத்திற்கு போடப்பட்டது என்றால் 81/6-ற்கு ஆகும்.1972 வருடம் தாக்கல் செய்த வழக்கில் நான் தரப்பினரா என்றால் தரப்பினர் தான்.அசல் வழக்கு எண்.609/1972 எப்பொழுது தள்ளுபடி ஆனது என்றால் 1981ல் ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். கருப்பு மந்திரி அரசாங்கத்தின் மீது வழக்கு தாக்கல் செய்ததும், அதை குறித்து மேல்முறையீடு செய்த விவரம் தெரியுமா என்றால் அந்த காலகட்டத்திலே தெரியும். அந்த காலகட்டத்தில் என்னையும் தரப்பினராக வழக்கில் சேர்க்க சொல்லி நான் மனு தாக்கல் செய்தேனா என்றால் செய்திருந்தேன். வழக்கு சொத்திற்கான பட்டா தற்பொழுது யார் பெயரில் உள்ளது என்றால் பேபி அம்மாள் பெயரில் உள்ளது, ஆனால் அது போர்ஜரி ஆகும். அவ்வாறு போர்ஜரி என்பதை ரத்து

செய்ய சொல்லி தாசில்தார், கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மனு கொடுத்தேனா என்றால் மனு கொடுத்துள்ளேன். எப்பொழுது மனு கொடுத்தேன் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு கொடுத்தேன். வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை யார் வாங்கியது என்றால் வழக்கறிஞரை வைத்து நாங்கள்தான் வாங்கினோம். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் தோராயமாக 1981ல் வழக்கு தொடுத்து அது எங்களுக்கு சாதமாக தீர்ப்பானது அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மின்சார துறையினர் மீது வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் 25 நபர்களும் சேர்ந்து தாக்கல் செய்தோம். வழக்கு சொத்தில் எனக்கும், மற்ற வாதிகளுக்கும் உரிமை கிடையாது என்றும், தவறுதலாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் பெயர் ஜெயபால் என்றால் சரிதான். என் பெயரில் பேபி அம்மாள் நிறைவேற்று மனு எண்.82/2007 தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த மனுவில் சுவாதீனத்தை ஒப்படைக்க கோரி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நிறைவேற்று மனுவில் இந்த வழக்கு சங்கதிகளை கொண்டு ஆட்சேபனை மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு ஆட்சேபனை மனு தாக்கல் செய்து அதன் பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளது செல்லாது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் தவறான ஆதாயம் அடைய வேண்டும் என்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:-</u>** இல்லை.